

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 30.05.2024 | 22. சிறை செல்லவும் அஞ்சாத ஊழியர்கள் எங்கே? |
|---|---|



**ஊ**ழிய சகோதரனே, முன்பு வாழ்ந்த பரிசுத்தவான்களும், மிஷனரிகளும், இரத்த சாட்சிகளும், சத்தியவான்களுமாகிய *மார்ட்டின் லூத்தரை, ஜான் பனியனை, வெஸ்லியை.....* நேசிக்கிறோம் என ஒருகாலத்தில் கூறினீர்கள் அல்லவா? அவர்களின் சுயசரிதை மடல் எழுதி வாழ்த்தினீர்களல்லவோ? அவர்களின் நினைவு வாசக புகைப்படங்களை கொண்டு உங்கள் இல்லத்தை அலங்கரித்தீர்களல்லவோ?...... அப்படியெல்லாம் செய்துவிட்டு, அவர்களின் அடிச்சுவடில் நடக்க மாத்திரம் செய்யவில்லையே!

அவர்களின் தியாக நன்மையான விளைவுகளை, அவர்களின் கடைசி இரத்த துளியிலும் பெற்றுக் கொண்டோம்..... ஆனால், நம் சொந்த இரத்தத்தின் ஒரு துளியும் சிந்திவிடாதபடி தன்னை பாதுகாத்திட நாடுகிறதே இன்றைய கோழையான ஊழியகளம்! அன்றுள்ள ஊழிய களத்தைவிட இன்றுள்ள ஊழியகளம் மகா கொடிது! அன்று, பாவத்தை கண்டித்த *யோவான்ஸ்நானகனை* சிறையில் அடைக்க, ஆறுமாதங்கள் மேல் தாமதமாயின! அந்த *யோவான்ஸ்நானகன்,* அந்த *எலியா,* இன்றைய நம் தெருக்களில் "பாவத்தை கண்டித்து பிரசங்கித்தால்" 6 – மாதங்களுக்குப் பிறகு அல்ல..... 6–வாரத்திற்குள் சிறையில் அடைபட்டு சித்திரவதைக்கு ஆளாவார்கள்!! அந்த தூயவான்களைப்போல் பாவத்தை 'பகிரங்கமாய்' கண்டித்து பிரசங்கிக்கும் உத்தம ஊழிய தீரர்கள் இன்று எங்கே? அவர்களுக்கே, நம் தேசம் காத்திருக்கிறது! ஆமென்.

**– ரத்னம்**